

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், அரசமலை ஊராட்சி, இடையம்பாறை கிராமத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 08.02.2024 அன்று துவக்கி வைத்தார். உடன் மின்சார வாரிய செயற்பொறியாளர் திருமதி.எம்.ஆனந்தாய், உதவி செயற்பொறியாளர் இரா.முத்துச்சாமி, உதவிப் பொறியாளர் எஸ்.சிங்காரக்கண்ணன், பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, ஊராட்சிமன்றத் தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி திண்டல் வேலாயுதசாமி திருக்கோவில் வளாகத்தில் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திருக்கோவில்களின் திருப்பணிகளை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்தனர். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கோவை மதுக்கரை இருப்புப் பாதைகளில் ரெயில்கள் மோதி

# யானைகள் இறப்பதைத் தடுக்க செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் கண்காணிப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

கோவை, பிப்.11-

ரயில் தண்டவாளங்களில் யானைகள் விபத்தில் இறப்பதைத் தடுக்க செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் உதவியுடன் கூடிய கண்காணிப்பு முறையை தமிழ்நாடு வனத்துறை நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தியது. கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரையில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் சுப்ரத் மஹாபத்தர மற்றும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் சீனிவாஸ். ரா.ரெட்டி ஆகியோர் முன்னிலையில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களால் இத்திட்டம் நேற்று முன்தினம் (09.02.2024) தொடங்கி வைக்கப்பட்டது.

கோவை வனக்கோட்டத்தில் சமீப காலமாக மனிதர்கள் யானை மோதல்கள் அதிகரித்து வருகின்றன. கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் உள்ள யானைகள் நீலகிரி மற்றும் சத்தியமங்கலம் வனப்பகுதிகளிலிருந்து கோயம்புத்தூர் வனக்கோட்டம் வழியாக கேரள மாநில வனப்பகுதிகளின், தென் பகுதிக்கு இடம்பெயருகின்றன. வாளையார், போலம்பட்டி, ஆனைக்கட்டி காப்புக் காடுகள், கோபினாரி காப்புக் காடுகள், ஹுலிக்கல், ஜக்கனாரி சரிவுகள், நீலகிரி கிழக்கு சாய்வு காப்புக் காடுகள், சோலக்கரை, சிங்கபதி மற்றும் இருட்டுப்பள்ளம் போன்ற பகுதிகள் யானைகளின் ஓய்விடங்களாகும்.

அதிகரித்து வரும் யானைகளின் எண்ணிக்கை, இடம்பெயர்தல் அவற்றின் வழித்தடங்களில் ஏற்படும் இடையூறுகள், விலங்குகளின் வழித்தடப் பாதைகளின் வளர்ச்சி மற்றும் விவசாய நடைமுறைகளில் மாற்றங்கள் ஆகியவை யானைகளின் நடமாட்டத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் இப்பகுதியில் மனிதயானை மோதல் அதிகரித்து வருவது தெரிய வருகிறது.

கோவை வனக்கோட்டம்

கோவை வனக்கோட்டத்தில், 2021 முதல் 2023 வரையிலான கடந்த மூன்று ஆண்டுகளில் யானைகள் சுமார் 9000 முறை வழிதவறி வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மதுக்கரை சரகத்தில் யானைகள் தண்டவாளத்தை கடக்கும்போது ஏற்படும் விபத்துகள் கோவை கோட்டத்தில் பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. மதுக்கரை சரகத்தில் சோழக்கரை பீட் மற்றும் போலம்பட்டி பிளாக் 1 பாதுகாக்கப்பட்ட காடுகள் வழியாக இரண்டு ரயில் பாதைகள் செல்கின்றன.

கேரள வனப்பகுதியுடன் வாளையார் ஆற்றங்கரையில் எல்லையை பகிர்ந்து கொள்ளும் இந்த வனப்பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகம் காணப்படுகிறது. எதிர்பாராதவிதமாக, 2008 முதல் ரயில்கள் மோதிய விபத்துகளில் இளம் கன்றுகள் மற்றும் இளம் யானைகள் உள்பட இதுவரை 11 யானைகள் இறந்துள்ளன. இரவு, பகல் மற்றும் அதிகாலையில் ரயில்வே வன ஊழியர்கள் மற்றும் காவலர்களை ஈடுபடுத்தி முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், ரயில்வே மற்றும் வனத்துறை இணைந்து சுரங்கப்பாதைகள் மற்றும் பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், இதுபோன்ற சம்பவங்கள் குறையவில்லை.

இதற்கு பயனுள்ள தீர்வு காண, வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, செயற்கை நுண்ணறிவுடன் கூடிய தன்னாட்சி கண்காணிப்பு முறையில் 24 மணி நேரமும் யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்து யானை வழித்தடங்களில் அறிமுகப்படுத்தி விபத்துக்களை முற்றிலும் தவிர்க்க அரசு முடிவு செய்தது. கள ஆய்விற்குப் பிறகு, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மிகவும் பாதிக்கப்படக்கூடிய 7 கி.மீ. நீளமுள்ள ரயில் இருப்புப் பாதை கண்டறியப்பட்டு செயற்கை நுண்ணறிவு அமைப்பை நிறுவ அரசால் 7.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பில், அனல் மற்றும் சாதாரண கேமராக்கள் பொருத்தப்பட்ட 12 உயரமான கோபுரங்கள், போலம்பட்டி வட்டம்1 வனப் பகுதியில் முக்கிய இடங்களில் 500 மீ இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் யானைகள் கடக்கும் முக்கிய பகுதிகளை உள்ளடக்கி, ரயில் பாதைகளின் இருபுறமும் 150 மீ தூரத்திற்கு முன்கூட்டியே விலங்குகளின் நடமாட்டத்தை, செயற்கை நுண்ணறிவு கேமராக்கள் மூலம் அறிய முடியும், உணரப்பட்ட சென்சார், தானாகவே வனத்துறையின் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றப்படுகிறது.

இது களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை நிகழ்நேர அடிப்படையில் செயலாக்குகிறது. வனத்துறையின் களப்பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர், ஷிப்ட் முறையில் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிகின்றனர். விலங்குகளின் நடமாட்டத்தை கண்காணித்து, இரயில் லோகோ பைலட்களுக்கு அழைப்புகள், குறுஞ்செய்தி மற்றும் எச்சரிக்கைகள் மூலம் தகவல்கள் உடனடியாக தெரிவிக்கின்றனர்.

இது தவிர, இரண்டு தடங்களிலும் ஏதேனும் விலங்கு இருந்தால் லோகோ பைலட்கள் முன்கூட்டியே பார்த்து செயல்பட டிஜிட்டல் டிஸ்ப்ளே எச்சரிக்கைகள், இரயில் தடங்களில் வைக்கப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு மூலம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் விபத்துகளைத் தடுக்க வனத்துறையும், ரயில்வே அதிகாரிகளும் இணைந்து செயல்படுகின்றனர்.

இந்த செயற்கை நுண்ணறிவு உருவாக்கப்பட்ட தரவுகள் விபத்துக்களை தடுப்பது மட்டுமின்றி, யானைகள் நடமாட்டம், யானைகளின் நடத்தை, தனிப்பட்ட யானைகளின் விவரக்குறிப்பு மற்றும் எதிர்கால முடிவுகளை எடுப்பதற்கு தேவையான தகவல்களை அளிக்கிறது.

இந்நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் துணை மேயர் ஆர். வெற்றிச்செல்வன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனக்குழு தலைவர் தீபக் ஸ்ரீவத்சவா, ஆனைமலை புலிகள் காப்பக வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் எஸ்.ராமசுப்பிரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், தெற்கு ரயில்வே, பாலக்காடு, கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் எஸ்.ஜெயகிருஷ்ணன், தெற்கு ரயில்வே, கிழக்கு பாலக்காடு, கோட்டப் பொறியாளர் அன்சுல் பாரதி, தலைமை நிர்வாக அதிகாரி விஜய் கருணாகரன், ஆலோசனை உறுப்பினர், மக்கள் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அலுவலர்கள், அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழக மீனவர்கள் மீதான

## இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை

## வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## தலைமைக் கழக அறிவிப்பு

**கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் 3076 தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் 534 படகுகள் கடத்தப்பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையின் அட்டூழியங்கள் குறித்தும் மீனவர் நலன் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாண்புமிகு பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய அமைச்சர்களிடம் வலியுறுத்தியுள்ளதோடு, மாண்புமிகு பிரதமருக்கு 9 கடிதங்களும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு 35 கடிதங்களும் எழுதியுள்ளார். ஆனாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சனையை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கையாண்டு வருகிறது; இலங்கை அரசின் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.**

**தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (11.02.2024 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் இராமேஸ்வரத்தில், கழக மீனவரணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.**

**ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்கும்படி நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இராமநாதபுரம், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர் சங்கங்களை அந்தந்த கழக மாவட்டச் செயலாளர்கள் திரட்டி ஆர்ப்பாட்டத்தை பெரும் வெற்றியடையச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருச்சி மத்திய - வடக்கு மாவட்டத்திற்கு

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





திருச்சி, பிப். 11-

திருச்சி மத்திய, வடக்கு மாவட்டங்களுக்கு கழகத் தேர்தல் அறிக்கைக் குழு வருகை குறித்து மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி, ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர்,கழக தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி,2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., எழிலன் எம்.எல்.ஏ., கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி.., எம்.எம்.அப்துல்லா எம்.பி., சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் வரும் பிப்ரவரி 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தஞ்சை மாவட்டத்திலுள்ள தஞ்சை நாகை சாலையில் அமைந்துள்ள குருதயாள்சர்மா திருமண மண்டபத்திற்கு வருகை தந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களைப் பெற உள்ளனர்.

அதுசமயம் திருச்சி மத்திய, வடக்கு மாவட்டத்தைச் சார்ந்த தொழிற்துறையினர், வியாபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், மருத்துவர்கள், வணிகர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



திருவாரூர் தொகுதிக்குட்பட்ட அம்மையப்பன் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு மாணவ – மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ஆகியோர் வழங்கினர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சிறப்பான நடவடிக்கைகளால்

# சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது!

### மும்பை ஜியோ உலக மாநாட்டு மையத்தில் சுற்றுலா அலுவலர்கள் விளக்கம்!

மும்பை, பிப்.11-

மும்பை ஜியோ உலக மாநாட்டு மையத்தில் நடைபெற்று வரும் ஓ.டி.எம். பயண சந்தை (ஓவர்சீஸ் டிராவல் மார்ட்) கண்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் பயண முகவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்வதற்கான வசதிகள் குறித்து விளக்கம் தெரிவித்தார்கள்.

சுற்றுலா அன்னிய செலாவணியை அதிகம் ஈட்டுகின்ற துறையாக திகழ்கின்றது. உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகள் தங்கள் விடுமுறை நாட்களை கழிப்பதற்காகவும், பொழுது போக்கவும் பல்வேறு உலக நாடுகளில் சுற்றுலா பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள். பல்வேறு நாடுகளில் ஆண்டு முழுவதும் தாங்கள் ஈட்டுகின்ற சம்பளத்தில் ஒரு பகுதியை சேமித்து, தாங்கள் விரும்புகின்ற நாடுகளில் சுற்றுலா பயணம் மேற்கொண்டு அந்த நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரிய இடங்கள், மத வழிபாட்டு தலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு உலக அறிவை வளர்த்துக் கொண்டு மன மகிழ்ச்சியான வாழ்க்கை மேற்கொள்கின்றார்கள். தற்போது விளையாட்டுகள் உலக அளவில் அதிகம் நடைபெறுவதாலும், வெளிநாடுகளில் நிறுவனங்களை அமைத்துள்ள நிறுவனங்கள் தங்கள் வணிக பயன்பாட்டிற்காக மாநாடுகள் நடத்தவும், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்வதன் காரணமாக சுற்றுலாத்துறையானது பல்வேறு வகைகளில் வளர்ந்து வருகின்றது.

முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது, இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாமல்லபுரம் சுற்றுலாத்தலம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும் சுற்றுலாத்தலமாக தற்போது விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளிநாட்டு மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னை திருவிழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத்தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர் வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண் பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்று பார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலான குறும்படங்கள் உலகமெங்கும் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில் சென்றடையும் வகையில் யூடியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்குபெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலா சந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் பயண சுற்றுலா சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரையிடப்பட்டும், புத்தகங்கள், சிறு கையேடுகள் ஆகியவை பயண ஏற்பாட்டாளர்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாத் துறையினர், பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டும் கவன ஈர்ப்பு செய்யப்படுகின்றது.

மும்பை ஜியோ உலக மாநாட்டு மையத்தில் 8.2.2024 தொடங்கி 10.2.2024 வரை நடைபெற்று வரும் ஓ.டி.எம். பயண சந்தை (ஓவர்சீஸ் டிராவல் மார்ட்) கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் பயண முகவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்வதற்கான வசதிகள் குறித்து விளக்கம் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் தமிழ்நாட்டின் பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் புகழ்பெற்ற ஊட்டி மலை ரயில், மதுரை ஆயிரம் கால் மண்டபம் உள்ளிட்ட பல்வேறு புகழ்பெற்ற சுற்றுலாத்தலங்களின் புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த பயண சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கில் மும்பை சுற்றுலா அலுவலர் ந.மாதவன், தலைமை அலுவலக கணக்கு அலுவலர் ஜாகீர் உசைன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உதவி இயக்குநர் (மக்கள் தொடர்பு) சி.சீனிவாசன், உதவி சுற்றுலா அலுவலர்கள் த.செல்வராஜு, து. பாபு உள்பட சுற்றுலா முகவர்கள், பயண முகவர்கள், ஓட்டல்தாரர்கள் பங்கேற்றனர்.

ஓ.டி.எம் பயண சந்தையில் 50 வெளிநாட்டு அரங்கங்களும், 28 மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த அரங்கங்களும், தனியார் அரங்கங்களும் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த அரங்கத்தை தினந்தோறும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு, தமிழ்நாட்டின் சிறப்புகளை அறிந்தனர். கண்காட்சியின் தரை தளத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த அரங்கங்கள் அமைக்கப்பட்ட நுழைவு வாயிலின் இரண்டாவது அரங்கமாக தமிழ்நாட்டின் அரங்கம் அமைந்தது பார்வையாளர்களை அதிகம் கவர்ந்தது.